நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய R.M. அல்லது S.R.M. ஆகிய 7 பேர் கொண்ட குழு ஒவ்வொரு மாவட்டத்திலும், அமைக்கப்பட்டு அவர்கள் தலைமையிலே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், விவசாயப் பெருங்குடி மக்கள், எங்கெங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்களோ, அதனை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்து, அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்புகொண்டு, நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைத் திறப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

172—

தடுப்பணை

***11406—திரு. வி.பி. நாகைமாலி:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், வடக்கு பொய்கைநல்லூர் கிராமத்தில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, வடக்கு பொய்கைநல்லூர் கிராமம், பரவையாறு வடிகாலின் குறுக்கே புதிய படுகை அணை அமைக்க ரூ.780 இலட்சத்திற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நீர்வளத் துறையின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

2022 ஏப்ரல் 26]

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வடக்கு பொய்கைநல்லூர் கிராமம் என்பது ஒரு கடற்கரை கிராமம் ஆகும். இங்கே ஏறக்குறைய 6,000 மக்கள் வசிக்கின்றார்கள். இக்கிராமத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரம் தோட்டப் பயிர்களாகும். குறிப்பாக மாமரங்கள், கத்தரி, வெண்டை, புடலை, பூசணி மற்றும் கீரை வகைகளை கணிசமான அளவில் பயிரிடுகின்றனர். குறிப்பாக, பொய்கைநல்லூர் கத்தரிக்காய் எங்கள் மாவட்டத்தில் பெயர் போனதாகும். மக்கள் விரும்பிக் கேட்டு வாங்கிச் சாப்பிடுவார்கள். சமீபத்தில் எங்கள் டெல்டா மாவட்டத்தை தாக்கிய கஜா புயலுக்குப் பின் இம்மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக மாறியுள்ளது. காரணம் கஜா புயலுக்குப் பின் கடல் அரிப்பால், எங்கள் கிராமத்திற்குள் கடலிலிருந்து உப்புத் தண்ணீர் உட்புகுந்ததால், விவசாயம் முற்றிலுமாக அழிந்துவிட்டது. குடியிருப்புகளும் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கின்ற எங்கள் கிராம மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, கடல் நீர் உட்புகுவதைத் தடுக்க ஒரு தடுப்பணை கட்டித்தரப்படும் என்ற மாண்புமிகு அமைச்சரின் வாக்குறுதி எங்களை மிகவும் மகிழ்விக்கிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அப்போது நன்றி சொல்லிவிடுங்கள். எவ்வளவு நேரம்? (குறுக்கீடு) மைக் இருக்கிறது. பேசுங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றிதான் சொல்ல இருக்கிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம். இதற்கு முன்பு நான் கேட்ட துணைக் கேள்விக்கு நீங்கள் தடுப்பணை கட்டப்படும் என்று உறுதி அளித்திருந்தீர்கள். அதையும் கடந்த 24 ஆம் தேதி அந்தக் கிராமத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் நான் சொன்னேன். அந்தக் கிராம மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். ஆகவே, விரைவாக அந்த தடுப்பணையைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2022 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே காவேரி டெல்டா பகுதியில், காவேரியாறு, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் போன்ற 36 ஆறுகள் கடலில் சென்று கலக்கின்றன. ஆனால், காலப்போக்கில் இந்த 36 ஆறுகளிலும், கடல் நீர் உள்ளே புக ஆரம்பித்துவிட்டது. கிட்டத்தட்ட 17 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடல் நீர் ஆற்றின் வழியாக வந்த காரணத்தினால், பயிர் செய்ய முடியவில்லை; குடிநீர் இல்லை; ஆடு, மாடுகள் தண்ணீர் குடிப்பதற்குகூட வழியில்லாத நிலைமை இருக்கின்றது. தஞ்சை மாவட்டத்தில் கடலோரப் பகுதியில் உள்ள கிராம மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுவிட்டார்கள். எனவே, கடல் நீரை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காக அரசு சில திட்டங்களைத் தயாரித்தது.

முற்பகல் 10–55

முதலில் வளவனாறு, அடப்பாறு, அரிச்சந்திரா நதி, வெள்ளையாறு, வேதாரண்யம் கால்வாய் ஆகியவற்றில் ADB (Asian Development Bank) ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் 5 இடங்களில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. அதுபோல் காவேரி ஆறு, நட்டுக்கன்னி மண்ணியாறு, கடுவையாறு, கிட்டனி உப்பாறு, இவ்விடங்களில் நபார்டுமூலம் பணம் பெற்று தடுப்பணைகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. நம்முடைய State Fund மூலம் கோதையாறு மற்றும் சக்கிலியன்வாய்க்காலில் தடுப்பணை கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆக மொத்தம் 11 இடங்களில் tail–end regulator கட்டப்பட்டு, கடல் நீர் உள்ளே புகுவது தடுக்கப்பட்டிருக்கின்றது. தற்போது நபார்டு நிதிமூலம் 2 இடங்களில் tail–end regulator கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வெள்ளப்பள்ளம், உப்பனாறு, மஞ்சளாறு ஆகியவற்றிலும் தடுப்பணை கட்டிக்கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் மீதமுள்ள இடங்களில் ADB Phase–II மூலம் மூன்று இடங்களிலும், ERM திட்டத்தின்மூலம் 5 இடங்களிலும் tail–end regulator கட்டிக்கொண்டிருக்கிறோம். மீதமுள்ள இடங்கள் 15 இருக்கின்றன. அதிலேதான் நீங்கள் குறிப்பிட்ட ஊர் வருகின்றது. அதற்கும் ரூ.7.8 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கடல் நீர் உள்ளே புகுவது என்பது வருங்காலத்தில் மிகப்பெரிய ஆபத்தை உருவாக்கும். இதற்கு எவ்வளவு செலவானாலும் தடுத்து நிறுத்தினால்தான் மக்கள் வாழ்வாதாரம் செழிப்பாக இருக்கும்.

2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். நன்றி சொல்லுங்கள். கேட்டதையெல்லாம் தந்துவிட்டார்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு செலவானாலும் எங்கள் மாவட்டத்தில் கடல் நீர் உட்புகுவதைத் தடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு எங்கள் மாவட்ட மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

180—

செவிலியர் கல்லூரி

***10249—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையின்கீழ் செவிலியர் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோவில்பட்டியிலிருந்து 50 கி.மீ. தொலைவிலுள்ள விருதுநகர் மாவட்டத்தில் 100 இருக்கைகளுடன் தற்போது ஓர் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி செயல்பட்டு வருகின்றது. அதுபோல் கோவில்பட்டியிலிருந்து 70 கி.மீ. தொலைவில் தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியானது 100 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு செவிலியர் பயிற்சிப் பள்ளி அல்லது ஒரு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைத்திட வேண்டும் என்பது இந்த அரசின் இலக்கு என்று ஏற்கெனவே அறிவித்தார்கள். எனினும்கூட,